1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-இன் கீழ் முதலமைச்சரின் திருத்த அறிக்கைகள்.

(அ) 3—5—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

3—5—1989 அன்று சட்டப்பேரவையில் நான் கூறும்போது வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி எனப் படும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. ஆர். விஸ்வநாதன் என்பவர் பேசிய கருத்துக்களை வன்னியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் பேசியதாக போலீஸ் சுருக்கெழுத்தர் அனுப்பிய தகவலை ஒட்டி நான் குறிப்பிட்டேன். அந்த மேடையில் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் இருந்தபோதிலுங்கூட நான் குறிப்பிட்ட கருத்துக்களை அந்தமேடையில் திரு விஸ்வநாதன் என்பவர்தான் பேசியிருக்கிறார். எனவே அதை நடவடிக்கைக் குறிப்பில் திரு சி. என். ராமமூர்த்தி என்பதற்குப் பதிலாக ஆர். விஸ்வநாதன் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தவறாகத் தகவல் தந்த போலீஸ் சுருக்கெழுத்தர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 28—4 1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111—ன் கீழ் மற்றொரு ருத்த அறிக்கை.

28-4-1989 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளித்தபோது புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட 10 இடங்களில் ஒன்றான குருந்தங்கோடு என்ற இடத்திற்குப் பதிலாக வெள்ளிச்சந்தை என்று திருத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–00)

3. தகவல் கோரல்

(அ) தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்வதில் எடுத்த நடவடிக்கைகளால் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையை இன்றையதினம் கொண்டுவர விரும்புகிறேன். தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்கின்ற அளவில் நம்முடைய அரசும் அதில் ஈடுபட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. இந்த நிகழ்ச்சி 1987ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு அப்போது இருந்த அமைச்சர் திரு. ராஜாராம் அவர்களுடைய சிபாரிசின் பெயரில் 192 இயந்திரங்கள் 16 யூனிட்டுகளுக்கு 12 வீதம் வாங்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அது அப்போது நிறுத்தப்பட்டு விட்டது. திரும்பவும் 1988ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியின்போது திடீர் என்று அலெக்சாண்டர் அவர்களைச் சந்தித்து—(மணியடிக்கப்பெற்றது) **I am not yielding**).—1988 ஆம் ஆண்டு திடீர் என்று **Jakhar** அவர்களும், **Brady** என்பவர் ஒருவரும் அலெக்சாண்டர் அவர்களைச் சந்தித்து இது விஷயமாகத் திரும்பவும் அந்த இயந்திரங்களை வாங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சொல்லிய பிறகும் கூட அது அப்போது எதன் காரணத்தாலோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை, திரும்பவும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இதிலே சம்பந்தப்பட்டவர்கள்—கும்மிடிபூண்டியிலேயுள்ள 'சிப்காட்'-டிலே அந்த இயந்திரங்களெல்லாம் தயாரிக்கப்படவில்லை தயாரித்தது போன்று ஒரு பாவனை காட்டி அந்த இயந்திரங்களுக்கு கிட்டதட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவிலே ஆர்டர் கொடுக்கப்பட்டு 15 இலட்சம் ரூபாய் அளவிற்கு அதற்குமானியமாக அளிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே சில அதிகாரிகள் செல்லப்பன், முருகையன் போன்றவர்களுக்கெல்லாம் சிபாரிசு கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அலெக்சாண்டர் அவர்களுக்குக்கூட சிபாரிசு கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகையிலெல்லாம் இந்தச் செய்திகளெல்லாம் கடிதங்களெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நம்முடைய அரசாங்கத்திற்கு எவ்வளவு டேமேஜ்,